தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் சென்னை 600 006

ந.க.எண்.34087 / சி2 / இ2 / 2022 நாள். 11.07.2022

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / அரசு தொடக்க / நடுநிலை / உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 2022-23ம் கல்வியாண்டில் காலியாகவுள்ள இடைநிலை / பட்டதாரி / முதுகலை ஆசிரியர் பணியிடங்களை தற்காலிகமாக நிரப்புதல் சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண். WP.No.16704/2022 மீதான இடைக்கால ஆணையின் அடிப்படையில் – திருத்திய வழிகாட்டு முறைகள் வழங்கப்பட்டமை – தொடர் நடவடிக்கை குறித்து அறிவுரை வழங்குதல் – சார்பு. |
| பார்வை | 1)தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் இணைச் செயல்முறைகள் ந.க.எண். 34087 / சி2 / இ2 / 2022 நாள்.23.6.2022<br>2)தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.34087 / சி2 / இ2 / 2022 நாள்.30.6.2022 மற்றும் 1.7.2022<br>3)சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண். WP.No.16704/22 மீதான இடைக்கால ஆணை நாள்.01.07.2022 மற்றும் 07.07.2022<br>4)சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வழக்கு எண். WP(MD)No.13751/2022 |

-----

பார்வை 1 மற்றும் 2ல் கண்டுள்ள செயல்முறைகளின் மீது அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

பார்வை-2ல் காணும் 1.7.2022 நாளிட்ட செயல்முறைகளில் பள்ளிக் கல்வித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / அரசு தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 2022-23ம் கல்வியாண்டில் காலியாகவுள்ள இடைநிலை / பட்டதாரி / முதுகலை ஆசிரியர் பணியிடங்களில் தற்காலிக ஆசிரியர் நியமனம் சார்பாக பார்வை-3ல் கண்டுள்ள சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.WP.No.16704 of 2022ன் மீது மாண்பமை உயர்நீதிமன்றத்தால் 01.07.2022ல் வழங்கப்பட்ட இடைக்கால ஆணையின் அடிப்படையில் திருத்திய வழிகாட்டு நெறிமுறைகள் (Revised Guidelines) வழங்கப்பட்டுள்ளது.

தபிபா

இவ்வகையில் சென்னை உயர்நீதிமன்ற ஆளுகைக்குட்பட்ட 24 மாவட்டங்களில் மட்டும் (சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு ஆளுகைக்குட்பட்ட 14 மாவட்டங்கள் நீங்கலாக) தற்காலிக ஆசிரியர் நியமனம் சார்ந்து விண்ணப்பதாரர்களிடமிருந்து மாவட்டக் கல்வி அலுவலகங்களில் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது.

இந்நேர்வில் சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.WP.No.16704/2022 ன் மீது மாண்பமை உயர்நீதிமன்றம் 07.07.2022ல் வழங்கியுள்ள இடைக்கால ஆணையில் "This Court in continuation to the earlier order passed by this court dated 01.07.2022, makes it clear that applications in respect of teachers who possess the qualification of pass in TET alone be processed." என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் தற்காலிக ஆசிரியர் நியமனம் சார்ந்து பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களை கீழ்க்காணும் அறிவுரைகளை பின்பற்றியும், காலஅட்டவணைப்படி பணிகளை மேற்கொள்ளுமாறும் தொடர்புடைய முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1) தற்காலிக ஆசிரியர் நியமனம் சார்ந்து சென்னை உயர்நீதிமன்ற இடைக்கால ஆணையின்படி இடைநிலை ஆசிரியர் / பட்டதாரி ஆசிரியர் பதவிக்கு ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களையும், முதுகலை ஆசிரியர் பதவிக்கு, முதுகலை ஆசிரியர் தெரிவுக்கான ஆசிரியர்தேர்வு வாரியம் மூலம் நடத்தப்பட்ட தேர்வுகளில் பங்கேற்று சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்து கொண்டவர்களையும் மட்டுமே தற்காலிக நியமனம் செய்யத்தக்க வகையில் விண்ணப்பங்கள் பரிசீலினைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்.

2) தற்காலிக ஆசிரியர் நியமனம் சார்ந்து 01.07.2022 நாளிட்ட செயல்முறைகளில் பத்தி எண். 3ல் வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதிகளுடன் ஆசிரியர் தகுதித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்களுள் ஒரு காலிப்பணியிடத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்டவர் விண்ணப்பம் செய்திருப்பின் பத்தி 4ல் தெரிவிக்கப்பட்டுள்ள முன்னுரிமையின் அடிப்படையில் நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

3) மேற்சொன்னவாறான நடவடிக்கைகள் கீழ்க்காணும் காலஅட்டவணைப்படி மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

தபிபா

| | | |
|---|---|---|
| i | மாவட்டக் கல்வி அலுவலகங்களில் பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டிய நாள் | 12.07.2022 மற்றும் 13.07.2022 |
| ii | மாவட்டக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களை 1.7.2022 நாளிட்ட செயல்முறைகளில் பத்தி 5ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி தேர்வு குழு பரிசீலித்து தகுதியான நபரை இறுதி செய்ய வேண்டிய நாட்கள் | 14.07.2022 மற்றும் 15.07.2022 |
| iii | தேர்வுக்குழுவால் தெரிவு செய்யப்பட்ட தகுதியான நபர் குறித்த பட்டியலை முதன்மைக் கல்வி அலுவலரிடம் தலைமையாசிரியர் சமர்ப்பிக்க வேண்டிய நாள் | 16.07.2022 |
| iv | தேர்வுக்குழுவால் தெரிவு செய்யப்பட்ட பட்டியலை கூர்ந்தாய்வு செய்து முதன்மைக் கல்வி அலுவலர் ஏற்பளிக்க வேண்டிய நாள் | 18.07.2022 |
| v | முதன்மைக் கல்வி அலுவலரால் ஏற்பளிக்கப்பட்ட தற்காலிக நியமனத்திற்கு பள்ளி மேலாண்மைக் குழுவின் ஒப்புதல் பெறப்படவேண்டிய நாள் | 19.07.2022 |
| vi | தற்காலிக நியமனம் பெற்றவர் பணியில் சேர்க்கப்படவேண்டிய நாள் | 20.07.2022 |

மேற்காண் அறிவுரைகளை சிறிது வழுவாமல் பின்பற்றி / எவ்வித புகாருக்குமிடமின்றி செயல்படுமாறு சம்மந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தொடக்கக் கல்வித் துறையில் தற்காலிக இடைநிலை ஆசிரியர் நியமனம் குறித்து தொடக்கக் கல்வி இயக்குநரால் தனியே அறிவுரைகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பள்ளிக் கல்வி ஆணையருக்காக

11/7/22

பெறுநர்

முதன்மைக் கல்வி அலுவலர்கள்

11.07.22.

சென்னை / செங்கல்பட்டு / காஞ்சிபுரம் / திருவள்ளூர் / வேலூர் / திருப்பத்தூர் / இராணிப்பேட்டை / திருவண்ணாமலை / விழுப்புரம் / கள்ளக்குறிச்சி / பெரம்பலூர் / அரியலூர் / கிருஷ்ணகிரி / திருப்பூர் / கோயம்புத்தூர் / கடலூர் / நாகப்பட்டினம் / திருவாரூர் / மயிலாடுதுறை / நீலகிரி / சேலம் / தருமபுரி / ஈரோடு / நாமக்கல்

நகல் தொடக்கக் கல்வி இயக்குநர் சென்னை 6 தகவலுக்காக